**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE & GRAVEL QUARRY OF M/s. T.PONNAMBALAM ROUGH STONE & GRAVEL QUARRY, OVER AN EXTENT OF 1.34.50 HECTARES LOCATED IN S.F.Nos.135/1, 135/2, 135/3A, 135/3B, 135/4 & 135/5 OF MENNALLUR VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 18.03.2025 AT 11.00 AM IN M/s.R.S.E MAHAL, MAMANDUR, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Selvi. Pallavi Varma, IAS., | Sub Collector,<br>Cheyyar. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai |
| 3. | Thiru. K. Prem Kumar | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Thriu.B. Thulasi Raman | Tahsildar,<br>Vembakkam Taluk,<br>Tiruvannamalai. |
| 6. | Thriu.M.Sathish | Revenue Inspector,<br>Dusi,<br>Vembakkam Taluk,<br>Tiruvannamalai |
| 5. | Public and Environmentalists | 102 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board has welcomed the Sub Collector, Cheyyar who presided the public Hearing meeting, the Government officials, the public, the environmentalists and explained the need of the Public Hearing for obtaining Environmental Clearance for the proposed rough stone and gravel quarry as follows.

"As per the Environmental Impact Assessment Notification 2006 all the projects and activities listed in the schedule to the notification, requires prior Environmental Clearance from the State Environment Impact

Assessment Authority (SEIAA). The Environmental Clearance process involves public consultation, which is why the public hearing meeting is being conducted for the proposed Rough stone and Gravel Quarry project by M/s. T. Ponnambalam. This project aims to quarry rough stone and gravel over an extent of 1.34.50 hectares in Mennallur Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per EIA Notification, 2006 the mining projects (Individual or Cluster) having extentabove 5 hectare requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of “Times of India” (English) & “Dinamalar” (Tamil) on 11.02.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone & gravel quarry of M/s. T. Ponnambalam which to be conducted at M/s. R.S.E Mahal, Mamandur, Vembakkam on 18.03.2025 @ 11.00 AM.

The District Environmental Engineer, further stated that the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details will be explained through power point presentation by the project proponent. Following the presentation, the public and NGOs can express their views, suggestions, and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority.”Thereafter, the authority will decide on the issue of Environmental Clearance to this proposed quarry.

The Sub Collector, Cheyyarrequested the project proponent to explain about the proposed rough stone & gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent,Thiru. K. Vijayaragavan,Environment Consultant, M/s. Geo Technical Mining Solutions,Dharmapuri(Consultant for the proposed rough stone & gravel quarry of M/s. T. Ponnambalam)explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by themthrough power point presentation.

ThentheSub Collector, Cheyyarrequested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one and instructed the participants to provide their name and address before sharing their feedback, and to do so one by one, to ensure an orderly & transparent process.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Mr. Kuppan, Menallur Village, (Ex. Panchayat President)**

He said "I would like to extend my respectful greetings to the honorable Sub-Collector,Cheyyar&District Environmental Engineer, and all government officials present in the public hearing meeting for the proposed rough stone and gravel quarry. Thiru T. Ponnambalamproposed to establish rough stone and gravel quarry on his own land, in an extent of 1.34.50 hectares. As Mahatma Gandhi said, "The growth of villages is the growth of the nation." In line with his vision, our village lacks basic amenities like streetlights, drinking water, and roads. However, with the proposed quarry, our village will receive these essential facilities.

Thiru T. Ponnambalam has been operating his existing quarry in compliance with government regulations, ensuring the safety and well-being of the local community. On the obligations of the Village people, he discontinued the supply of Rough Stones to one of the crusher in the Village since the supply lorry has to passed through the village.He has also contributed to the village development by providing financial support to the local temple. He donated ₹5 lakhs to the school and provided desks and chairs when requested to the school. He has provided various facility to the

well-being of the people. Moreover, he has planted 2000 tree saplings around the quarry area.During a recent bereavement in our village, Thiru T. Ponnambalam has provided ₹50,000 to the grieving family. The Quarrying operationis carried out without affecting the nearby public.His commitment to the community welfare is truly commendable.Therefore, I whole-heartedly support the proposed rough stone and gravel quarry by Thiru T. Ponnambalam and express my sincere gratitude". Finally, he concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**2. Mr. Panneerselvam, Menallur Village, (Deputy Chairman of PanchayatCouncil)**

He said "I extend my respectful greetings to the Sub Collector, Cheyyar&District Environmental Engineer and all government officials present, as well as to everyone here. I whole-heartedly welcome the establishment of this proposed quarry and express my support for it and concluded his speech by **expressing his support** for theproposed quarry.

**3. Mr. Duraimurugan, Menallur Village**

He said "I would like to mention that the establishment of this quarry has brought numerous benefits to our village. Our village school has received financial assistance, and we have gained access to better roads, streetlights and drinking water facilities. Thanks to Thiru Ponnambalam, our villagers have secured employment opportunities, and farmers have received various forms of support.Notably, Thiru. Ponnambalam has consistently provided assistance to our school without hesitation. He has donated Rs. 5 lakhs to the school. Moreover, his lorries do not enter our village, instead, they operate outside the village limits. As a result, our villagers do not face any issues due to the lorries. Then he concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**4. Mr. Chandrashekar, Menallur village**

He said "I would like to mention that our panchayat has 10-15 quarries, which have increased the mineral resources in our area. The financial assistance from these quarries has helped to develop our village. Particularly this quarry has provided employment opportunities to 200-300 people. Out of the 2000 people living in our village, 20-25% are employed by this quarry. There are no objections to the establishment of this quarry. The quarry has also provided significant assistance to our schools, which has improved considerably over the past decade. The living standards of our villagers will improve due to this quarry. Finally, he concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**5. Mr. SureshKumar, Menallur Village,**

He said that "We will not be affected due to the establishment of the Rough stone and gravel quarry of Thiru T. Ponnambalam. This is because the people have benefited from his efforts without any harm. He has provided various forms of assistance to the Village people.The quarry has brought numerous benefits, but I like to mention that it would be more benefitable if the local village people get more job opportunities". Then, he concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**6. Mr. Murugan, Poonaithangal Village,**

He said, "I would like to extend my heartfelt greetings to the Sub Collector, Cheyyar and District Environmental Engineer who are present here. According to the Environmental Protection Act of 1986, environmental protection is not only for humans, but also for animals, plants, and everyone else. Thiru T. Ponnambalam is a well-known person in our village. The rough stone and gravel quarry should be operated in a way that it does not harm our village environment. Air pollution is being caused as the lorries pertaining quarriespasses through our village roads. Therefore, it is necessary to sprinkle water on the roads regularly to prevent Air pollution. If the quarry is operated without causing harm to our village and the environment, it would be beneficial and he concluded his speech.

**7. Mr.Krishnaswamy, Menallur Village,**

He stated that "Thiru T. Ponnambalam has provided various financial assistances to our village school. Quoting the phrase 'Nalla Nalla Pillaikalai Nambi' and thanked Thiru T. Ponnambalam for helping in numerous ways to the school children in our village. May his support for education continue, and may his life flourish. With that, I whole-heartedly welcome the establishment of this proposed rough stone and gravel quarry". Finally, he concluded his speech **by expressing his support** for the proposed quarry.

**8. Mr. Ramachandran, NGO, Andhra Pradesh.**

He said that "the establishment of this quarry will improve the livelihood of this village people, as they will easily get the necessary construction materials to build their homes. Without gravel, no construction work can takes place. Therefore, this quarry is essential. The quarry will also contribute to the better future of the village people. Hence, I request the government to grant permission for this proposed quarry establishment". Finally, he concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**9. Mr. M.C. Ravi, Menallur Village,**

He said "I would like to extend my greetings to the Sub Collector, Cheyyar and the District Environmental Engineer who have conducting this public hearing. Wehave no objections to the establishment of this rough stone and gravel quarry. In fact, our village people have benefited in various ways from this quarry. Everyone has got job opportunities. Moreover, T. Ponnambalam has been providing various funds for constructing temples and conducting festivals in our village. I have one request to the project proponent that coconut tree saplings shall be planted around the quarry, and also on the village roads leading to schools and temples". Finally, he concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**10. Mr. Muthu, Menallur Village,**

He quoted the following Thirukkural verse,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

and explained that "If the people of our village are sad, Thiru. Ponnambalam will also be sad. Whoever comes and asks for help, he continuously provides assistance to the people and the village. Our village people have benefited in numerous ways from his quarry, and he will continue to do so. I **extend my support** to his quarry and request the government to grant permission for its establishment".

**11.Thiru. GuruKrishna, N.G.O,**

He said that "The people of this village should be provided with clean drinking water facilities by the proprietor of the rough stone and gravel quarry. Additionally, this quarry should be operated in a way that it does not pollute the air. I also request that the schools in this village should be supported, as the educational infrastructure in this village is not good. Education should be provided to all students, and financial assistance, sports facilities, and building facilities should be provided. Currently, local Village panchayat are seeking the industrial development. Moreover, the people of this village also rely on this quarry. Therefore, the government should grant permission to this quarry. Finally, he concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**12. Mr. Venkatesan, Girijapuram Village,**

He said that "Thiru T. Ponnambalam, the owner of the rough stone and gravel quarry, has provided numerous donations to our village temple. He has done various good deeds and provided facilities to our village, and therefore, we have no objections to the establishment of this quarry". Then he concluded his speech by **expressing his support** for the quarry's establishment.

**13. Mr. A. Subramaniam, N.G.O.,**

He said that "Villages cannot develop without the growth of industries. Therefore, the establishment of Thiru T. Ponnambalam's rough stone and gravel quarry at this village will bring various benefits to the village and the people. This quarry will also provide job opportunities for the village people, and hence, we should welcome such quarries. At the same time, we should also protect the environment. The government should provide guidelines for the operation of this quarry. This quarry should operate in accordance with the guidelines and without causing any harm to the village people. Additionally, the dust generated by this quarry should be controlled, water should be sprinkled on the roads, and the quarry should operate in accordance with the Environmental Protection Act. I believe that the Proprietor of this quarry will operate in accordance with the guidelines, and he concluded his speech by **expressing his support** for the establishment of the quarry

**14. Mr. Panneerselvam, Menallur Village,**

He said that "When my wife passed away, Thiru. Ponnambalam provided financial assistance of Rs. 20,000/- for her funeral ceremony. As such, the quarry shared in the suffering of all, including the people of his village" and he concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

**15. Mrs. Alamelu, Menallur Village,**

She said that "Thiru T. Ponnambalamrough stone and gravel quarry is set to be established in our village, and we have no objections to it". She concluded her speech by **expressing her support** for the establishment of the quarry.

**16. R. Perumal, Menallur village,**

He said that he has no objection to the establishment of this quarry and concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**17. Mr. Baskar, Menallur village,**

He said that Thiru T. Ponnambalam's quarry, operating in Menallur village, has not caused any harm to the village or its people. In fact, the quarry has provided various benefits to everyone. Therefore, on behalf of the village people, he wholeheartedly **expressed his support** for the establishment of the quarry.

**The following 13 members of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone and Gravel quarry. All the 13 members haveexpressed their support to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Tmt. S. Fathima, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 2. | Thiru. A. Murali S/O. Annamalai, Mennallur Village, Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Thiru. S. Duraimurugan S/O. R. Subramanian, Mennallur Village, Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. Ungarala Shankaraiah, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Thiru. M. Muthu Raja, Ramnadh. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Thiru. A.P. Rajendiran, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 7. | Thiru. S. Venkata Subbaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 8. | Thiru. B. Muni Krishnaian, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 9. | Thiru. P. Hajarathaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 10. | Thiru. A. Venkata Subbaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 11. | Thiru. D. Malardavan, Chennai. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 12. | Thiru. B. Venkatesh,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 13. | Thiru. E. Kuppan S/O. Etti,<br>Ex Panchyat President,<br>Mennallur Village, Vembakkam Taluk,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |

As there wereno views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Sub Collector, Cheyyar, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 11.02.2025 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (08 pages/102 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting-13

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Sub Collector,**
**Cheyyar.**

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமத்தில் புல எண்கள். 135/1, 135/2, 135/3A, 135/3B, 135/4 மற்றும் 135/5–ல் 1.34.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 18.03.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மாமண்டூரில் அமைந்துள்ள திரு. R.S.E மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | செல்வி. பல்லவி வர்மா இ.ஆ.ப., | சார் ஆட்சியர்,<br>செய்யாறு. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | திரு. க. பிரேம் குமார் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | திரு.B. துளசி ராமன் | வட்டாட்சியர்,<br>வெம்பாக்கம் வட்டம்,<br>திருவண்ணாமலை. |
| 6. | திரு.M. சதிஷ், | வருவாய் ஆய்வாளர்,<br>தூசி உள்வட்டம்,<br>வெம்பாக்கம் வட்டம்,<br>திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (102 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய சார் ஆட்சியர், செய்யாறு அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு

மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமத்தில், 1.34.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள்.T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். R.S.E மஹாலில் 18.03.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினமலர் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி தாள்களில் 11.02.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை

தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது சார் ஆட்சியர், செய்யாறு அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்".

சார் ஆட்சியர், செய்யாறு அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. கே. விஜயராகவன், சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யுசன்ஸ், தருமபுரி. (தி/ள்.T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், சார் ஆட்சியர், செய்யாறு அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

<u>1. திரு. குப்பன், மேனல்லூர் கிராமம் (முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்).</u>

இவர் கூறுகையில், "தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் மதிப்பிற்குரிய சார்

ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பொன்னம்பலம் ஐயா அவர்கள் அவருடைய சொந்த இடத்தில் 1.34.50 ஹெக்டர் பரப்பளவில் கல்குவாரியை அமைக்க உள்ளார். கிராமம் வளர்ந்தால் தான் நாடு வளரும் மற்றும் நமது அண்ணல் காந்தியடிகள் கூறியதைப் போல், "கிராம வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி". அப்படிப் பார்க்கையில், நிறைய பஞ்சாயத்திற்கு தெருவிளக்கு வசதி இல்லை குடிநீர் வசதி இல்லை. சாலை வசதி இல்லை. இந்த குவாரி அமைவதால் எங்கள் கிராமத்திற்கு இந்த அனைத்து வசதியும் கிடைக்கிறது. மேலும் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டே பொன்னம்பலம் அவர்கள் கல்குவாரியை இயக்குவதால் மக்கள் இவ்வளவு பேர் நல்ல எண்ணத்துடன் வந்துள்ளனர். பொன்னம்பலம் ஐயா அவர்கள் ஊருக்குள் உள்ள ஒரு கிரஷருக்கு சாதாரன கற்கள் வழங்குவதால் லாரிகள் ஊருக்குள் செல்ல வேண்டியிருந்தது. பொதுமக்கள் இதனால் பாதிப்பு ஏற்படுவதாக கோரிக்கை விடுத்ததின் பேரில் அந்த கிரஷருக்கு சாதாரன கற்கள் வழங்குவதை நிறுத்திவிட்டார். அவருடைய லாரிகள் எதுவும் ஊர் மற்றும் தெரு வழியாக செல்வதில்லை. திரு.பொன்னம்பலம் ஐயா அவர்கள் எங்கள் ஊர் கோவிலுக்கு நிதி அளித்துள்ளார், அரசாங்க விதிமுறைகளின்படி பள்ளிக்கூடத்திற்கு 5 லட்சம் நிதி அளித்துள்ளார். உயர்நிலைப் பள்ளிக்கு மேசை தேவை என்று கேட்போது அடுத்த தினமே அதனை ஏற்பாடு செய்து கொடுத்து உதவினார். இவர் மக்களின் நலனுக்காக இதுபோன்ற பல்வேறு வசதிகளை செய்துள்ளார். மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் துயரத்தை புரிந்து கொண்டு உதவி செய்துள்ளார். சமீபத்தில் எங்கள் ஊரில் ஒரு இறப்பு ஏற்பட்டது. அந்த இறப்பிற்கு திரு.பொன்னம்பலம் ஐயா வருகை புரிந்து இழந்த குடும்பத்திற்கு ரூபாய் 50,000/- அளித்துள்ளார். மேலும் அவர் குவாரியை சுற்றி 2000 மரக்கன்றுகள் வைத்துள்ளார். மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் பாதுகாப்பாக வெடி வைத்து குவாரியை இயக்குகிறார். இதையெல்லாம் நாம் மறக்க முடியாது எனவே தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதற்கு மனப்பூர்வமான சம்மதம் தெரிவித்துக்

கொள்கிறேன்" நன்றி என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>2. திரு. பன்னீர்செல்வம், மேனல்லூர் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "வருகை புரிந்து இருக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் மற்றும் அனைவருக்கும் வணக்கம். இந்த குவாரியை நான் வரவேற்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>3. திரு. துரைமுருகன், மேனல்லூர் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "இந்த கல்குவாரி அமைவதால் எங்கள் ஊர் பள்ளிக்கு நிதி உதவி கிடைக்கிறது மேலும் சாலை வசதி, மின்விளக்கு, குடிநீர் வசதி போன்றவை கிடைக்கிறது. திரு. பொன்னம்பலம் ஐயா அவர்களால் எங்கள் ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது, விவசாயிகளுக்கு பல்வேறு உதவி புரிந்துள்ளார். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், பள்ளிக்கு உதவுவதில் அவர் என்றும் தயங்கியதில்லை. பள்ளிக்கூடத்திற்கு ஐந்து லட்சம் நிதி அளித்துள்ளார். இவருக்கு சொந்தமான லாரிகள் எதுவும் ஊருக்குள் வருவதில்லை, அவை எல்லைக்கு வெளியில் தான் செல்கின்றன. எங்கள் ஊர் மக்களுக்கு லாரிகளால் எந்த பாதிப்பும் இல்லை. எனவே இந்த குவாரியை நான் வரவேற்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொண்டார்.

**<u>4. திரு. சந்திரசேகர், மேனல்லூர் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "எங்கள் பஞ்சாயத்தில் 10-15 கல்குவாரிகள் உள்ளன. இந்த கல்குவாரியால் எங்கள் பஞ்சாயத்தில் கனிம வளங்கள் அதிகரித்துள்ளன. இந்த குவாரியின் நிதி உதவி மூலமாக எங்கள் ஊர் பஞ்சாயத்து மிகவும் மேம்பட்டுள்ளது. இந்த குவாரியால் 200-300 மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. எங்கள் கிராமத்தில் 2000 மக்கள் இருக்கின்றனர் இதில் 20

முதல் 25 சதவீத மக்கள் இந்த குவாரியால் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். இந்த குவாரி அமைவதற்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. பள்ளிகளுக்கு மேலும் நிறைய உதவிகள் செய்ய வேண்டும். ஏற்கனவே பள்ளிகளுக்கு நிறைய செய்துள்ளார். பத்து வருடத்திற்கு முன்னர் பள்ளியின் தரம் வேறு ஆனால் தற்போது பள்ளியின் தரம் நன்கு மேம்பட்டு உள்ளது. இந்த கல்குவாரியால் எங்கள் கிராமம் வளாச்சி அடைந்துள்ளது, மேலும் இக்கல்குவாரி அமைவது எங்கள் கிராம பஞ்சாயத்திற்கு உதவியாக இருக்கும். எனவே இந்த தி/ள்.T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைய இருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

5. திரு சுரேஷ் குமார் , மேனல்லூர் கிராமம்.

இவர் கூறுகையில், "தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஏனெனில் அவரால் மக்கள் நன்மைகள் அடைந்துள்ளனரே தவிர தீமைகள் அடையவில்லை. பல்வேறு உதவிகளை இவர் செய்துள்ளார். இந்த குவாரி மூலம் பல்வேறு உதவிகள் கிடைத்துள்ளது ஆனால் ஒரே ஒரு குறை எண்ணவென்றால், எங்கள் ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் பல ஏற்படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

6. திரு. முருகன், பூனைந்தாங்கல் கிராமம்.

இவர் கூறுகையில், "வருகைபுரிந்திருக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் அவர்களுக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் – 1986ன் படி சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல அது விலங்குகள். தாவரங்கள் மற்றும் அனைவரும் சார்ந்த விஷயம். தி/ள். T.பொன்னம்பலம், அவர்கள் இந்த கிராமத்தில் உள்ள அனைவருக்கும் தெரிந்தவர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு பாதிப்பை தடுக்கவும் குறைக்கவும் அவர்கள்

என்ன செய்ய போகிறார்கள். வீடுகள் நிறைந்துள்ள பகுதிகளில் மாசு அதிகமாக ஏற்படுகிறது, தண்ணீர் சரியாக தெளிப்பதில்லை, சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி எங்கள் கிராமத்தின் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் குவாரியை நடத்த வேண்டும். குவாரியின் லாரிகள் எங்கள் ஊர் சாலையில் இயங்குவதால் சாலை மாசுபடுகிறது. இவ்வாறு மாசுபடாதவாறு, எங்கள் ஊருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு குவாரியை இயக்கினால் நன்றாக இருக்கும்" என தெரிவித்து உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. கிருஷ்ணசுவாமி, மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "தி/ள்.T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி எங்கள் ஊர் பள்ளிக்கு பல்வேறு நிதி உதவிகளை செய்துள்ளது. "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி" என்ற மேற்கோளை கூறி இவ்வரிகளுக்கு ஏற்றார் போல் இவரது உதவியால் எங்கள் ஊர் பிள்ளைகள் பல்வேறு நன்மைகளை அடைந்துள்ளனர். அவர் கல்விக்கு அளிக்கும் உதவி தொடரட்டும், அவரது வாழ்க்கை சிறப்பாக இருக்கட்டும்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**8. திரு. ராமச்சந்திரன், என்.ஜி.ஓ, ஆந்திரா.**

இவர் கூறுகையில், "இந்த கல்குவாரி அமைய இருப்பதால் இந்த ஊர் கிராம மக்களின் வாழ்வாதாரம் மேம்படும், அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு தேவையான கட்டுமான பொருட்கள் எளிமையாக கிடைக்கும். கிராவல் இல்லாமல் எந்த கட்டுமான தொழிலும் நடக்காது. எனவே இந்த குவாரி அத்தியாவசியமாகிறது. இந்த குவாரியால் கிராம மக்களின் வருங்காலம் மேம்பாடு அடையும். எனவே இந்த குவாரி அமைவதற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். இந்த குவாரிக்கு எனது முழு ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. எம். சி. ரவி, மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல்

பொறியாளர் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தி/ள்.T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இந்த கல்குவாரியால் எங்கள் ஊர் மக்கள் பல்வேறு பயன்களை அடைந்துள்ளோம். அனைவருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. மேலும் எங்கள் ஊரில் கோவில் கட்டுவதற்கு திருவிழா நடத்துவதற்கு பல்வேறு நன்கொடைகளை திரு. T.பொன்னம்பலம், அவர்கள் அளித்து வருகிறார்கள். மேலும் ஒரு கோரிக்கையை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்; கல்குவாரியை சுற்றி தென்னங்கன்றுகள் நட வேண்டும் மற்றும் குவாரியிலிருந்து எங்கள் ஊர் பள்ளி மற்றும் கோவில் வரை அனைத்து சாலைகளிலும் தென்னங்கன்றுகள் குவாரி சார்பில் நட வேண்டும் என வேண்டுகோள் வைத்து இந்த கல்குவாரி அமைவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**10. திரு. முத்து, மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து" என்ற திருக்குறளை மேற்கோள் காட்டி எங்கள் ஊர் மக்களின் முகம் வாடி இருந்தால் திரு. பொன்னம்பலம் ஐயா அவர்கள் வாடி விடுவார். யார் வந்து எந்த உதவி கேட்டாலும் மக்களுக்கும் ஊருக்கும் தொடர்ந்து உதவி செய்து வருகிறார். இவருடைய குவாரியால் எங்கள் ஊர் மக்கள் பல்வேறு நன்மைகள் அடைகின்றனர். மேலும் அதை அவர் தொடர்ந்து செய்வார். இவரது குவாரிக்கு அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு. குருகிருஷ்ணா, அரசு சாரா அமைப்பு.**

இவர் கூறுகையில், "தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் இந்த ஊர் மக்களுக்கு தூய்மையான குடிநீர் வசதி

ஏற்படுத்தி தர வேண்டும். மேலும் காற்று மாசுபடாதவாறு இந்த குவாரியை நடத்த வேண்டும். இந்த கிராமத்தில் அமைந்திருக்கும் பள்ளிகளுக்கு உதவி புரிய வேண்டும். இந்த கிராமத்தில் கல்வி கட்டமைப்பு நன்றாக இல்லை. அனைத்து மாணவர்களுக்கும் கல்வி அளிக்க வேண்டும். மேலும் மாணவர்களுக்கு நிதி உதவி, விளையாட்டு மையதானம் மற்றும் கட்டிட வசதி செய்து தரவேண்டும். தற்போது உள்ளாட்சி, கிராம பஞ்சாயத்து போன்றவை தொழில்துறையின் முன்னேற்றத்தினை எதிர்பார்த்து இருக்கிறது. மேலும் இந்த ஊர் கிராம மக்களும் இந்த குவாரியை நம்பி இருக்கின்றனர். எனவே அரசு இந்த குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டும்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**12. திரு. வெங்கடேசன், கிரிஜாபுரம் கிராமம்.**

இவர் கூறுகையில், "தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி எங்கள் ஊர் கோவிலுக்கு நன்கொடைகள் பல அளித்துள்ளன. எங்கள் ஊர் கிராமத்திற்கு பல்வேறு நன்மைகள், பல்வேறு வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது எனவே இந்த குவாரி அமைவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**13. திரு. எ. சுப்பிரமணியம், அரசு சாரா அமைப்பு.**

இவர் கூறுகையில், "தொழிலகங்களின் வளர்ச்சி இல்லாமல் கிராமங்கள் மேம்பாடு அடையாது. எனவே தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி இங்கு அமைவதால் இந்த கிராமம் மற்றும் கிராம மக்கள் பல்வேறு பயன்களை அடைவர். இந்த குவாரியால் இந்த கிராம மக்களுக்கு பல்வேறு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். எனவே நாம் இதுபோன்ற குவாரிகளை வரவேற்க வேண்டும். அதே சமயத்தில் நாம் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும். அரசு இந்த குவாரி இயங்குவதற்கான விதிமுறைகளை அளிக்க வேண்டும். இந்த குவாரி கிராம மக்களுக்கு எந்த வித பாதிப்பும் இன்றி விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்க வேண்டும். மேலும் இந்தக் குவாரியால் ஏற்படும் தூசுகளை, இந்த குவாரி சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு

இயங்க வேண்டும். இந்த குவாரி உரிமையாளர் விதிமுறைகளுக்கும் உட்பட்டு இந்த குவாரியை இயக்குவார் என்று நம்புகிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**14. திரு. பன்னீர்செல்வம், மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "என் மனைவி இறந்தபோது இறுதிச் சடங்கிற்கு வருகை புரிந்து திரு. பொன்னம்பலம் ஐயா அவர்கள் ரூபாய் 20,000/- நிதி அளித்தார்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**15. திருமதி. அலமேலு, மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி எங்கள் ஊரில் அமைய இருப்பதில் எங்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லை" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**16. திரு. ஆர். பெருமாள், மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த குவாரி அமைய இருப்பதில் எனக்கு எந்தவித பாதிப்பும் இல்லை" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**17. திரு. பாஸ்கர் மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த மேனல்லூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் பொன்னம்பலம் அவர்களின் குவாரியினை எங்கள் ஊருக்கும் மக்களுக்கும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நடத்தி வருகின்றார். தி/ள். T.பொன்னம்பலம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அனைத்து மக்களுக்கும் பல்வேறு உதவிகளை அளித்துள்ளது. எனவே இந்த குவாரி அமைவதில் எங்கள் ஊர் மக்கள் சார்பாக மனப்பூர்வமாக சம்மதம் தெரிவிக்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 13 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 13 நபர்களும் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| **வ. எண்** | **பெயர் மற்றும் ஊர்** | **கருத்து** |
|---|---|---|
| 1. | எஸ். பாத்திமா, அனந்தபூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2. | அ.முரணி, மேனல்லூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | எஸ்.துரைமுருகன், மேனல்லூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4. | உங்கரலா சங்கரய்யா, நால்கொண்டா மாவட்டம், தெலுங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | எம். முத்துராஜா, இராமநாதபுரம் மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | எ.பி.ராஜேந்திரன், திருப்பதி மாவட்டம், ஆந்திர பிரதேசம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | எஸ். வேங்கட சுப்பையா, கடப்பா மாவட்டம், ஆந்திர பிரதேசம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திரு. முனி கிருஷ்ணன், திருப்பதி மாவட்டம், ஆந்திரப் பிரதேசம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. பி. ஹஜரத்தய்யா, நெல்லூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10. | திரு.எ. வேங்கட சுப்பையா, கர்னூல் மாவட்டம், ஆந்திர பிரதேசம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11. | திரு.டி. மலர்தவன், ராயபுரம், சென்னை | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12. | திரு.பி. வெங்கடேஷ், அனந்தபுரம் மாவட்டம், ஆந்திர பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 13. | திரு. எ. குப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், மேனல்லூர் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், சார் ஆட்சியர், செய்யாறு ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 11.02.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (08 பக்கங்கள்/102 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 13 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**சார் ஆட்சியர்,**
**செய்யாறு.**